செய்தி வெளியீடு எண் : 679

நாள் : 23.10.07

# அமைச்சர் பொங்கலூர் நா.பழனிசாமி கிண்டி அரசு தொழிற் பயிற்சி மையத்தில் திடீர் ஆய்வு

தமிழக அரசின் தொழில் வணிகத் துறையின்கீழ் இயங்கிவரும் தொழிற் பயிற்சி மையத்தின் செயல்பாடுகளையும், அடிப்படை கட்டமைப்பு வசதிகளையும் திடீர் ஆய்வு செய்த அமைச்சர் பொங்கலூர் நா.பழனிசாமி அவர்கள் அங்கு பயின்றுவரும் மாணவர்களின் குறைகளைக் கேட்டறிந்து அவர்களின் கோரிக்கையை ஏற்று

1) விளையாடுவதற்கு இருக்குமிடத்தை சுத்தப்படுத்தி மைதானம் அமைத்தல்
2) கிண்டி தொழில் நுட்ப தகவல் மையம் மூலம் மாணவர்களுக்கு தேவையான இலவச புத்தக வசதி அளித்தல்
3) குடிநீர் வசதி ஏற்படுத்தி தருதல்

ஆகியவற்றை உடனே அமைத்துத்தர அந்த இடத்திலேயே பயிற்சி மைய கண்காணிப்பாளருக்கு உத்தரவிட்டார். மேலும் மாணவர்கள் கோரிக்கை வைத்த இலவச பேருந்து அனுமதி அட்டையை பொருத்தவரை இது சம்பந்தமாக போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கலந்தாலோசித்து முடிவு செய்யப்படும் என தெரிவித்தார்.

பயிற்சி மையத்தை பார்வையிட்ட அமைச்சர் இந்த மைய வளாகத்திற்கு தேவையான சுற்றுச் சுவர், மையத்தின் வெளிப்புற

தோற்றத்திற்கான மேம்பாடு மற்றும் மையத்திற்கான பெயர் பலகை, பயிற்சி மையத்தில் CNC இயந்திரத்தை நிறுவி மாணவர்களுக்கு CNC இயந்திர பயிற்சி அளித்தல் மற்றும் குளிரூட்டிகளில் (Refrigeration and Air Condition) உயர் தொழில் நுட்பம் போன்றவற்றில் பயிற்சி அளிக்கவும் ஆய்வு செய்து ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பயிற்சி மைய கண்காணிப்பாளருக்கு உத்தரவிட்டார்.

இது மட்டுமின்றி கிண்டியில் தொழில் பயிற்சி மைய வளாகத்தில் நிறுவ உத்தேசிக்கப்பட்ட CAD / CAM எனப்படும் Computer Aided Design and Computer Aided Manufacturing மையம் அமைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையை ஆய்வு செய்து ஒரு வாரத்தில் முழுமையாக அறிக்கையை சமர்ப்பிக்க அறிவுரை வழங்கினார். மேற்படி ஆய்வின் போது தொழிற் பயிற்சி மைய கண்காணிப்பாளர் திரு. வீராச்செல்வன் மற்றும் தொழில்வணிகத் துறை அலுவலர் திரு இராமச்சந்திரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

[signature] 21/x/07

~~Senior~~ Personal Assistant to
Minister for Rural Industries
Secretariat, Chennai-600 009

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.